3. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(எ) சட்டமன்ற உறுப்பினர்களுக்கான கணினிப் பயிற்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கான 15 நாள் கணினிப் பயிற்சி, முதலில் 14-5-2003 வரை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தற்போது சட்டமன்றக் கூட்டத்தொடர் 10-5-2003 அன்றே முடிவடைய உள்ளதால், சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் எஞ்சிய மூன்று நாள் பயிற்சியை, மொத்தம் 6 மணி நேரம், சட்டமன்றக் கூட்டத்தொடர் முடிந்த பிறகும் எடுத்துக்கொள்ள தற்போது வசதி செய்யப்பட்டுள்ளது. அதன்படி, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் எஞ்சிய மூன்று நாள் பயிற்சியை வரும் 11-5-2003 முதல் 13-5-2003 வரை, அதாவது ஞாயிறு, திங்கள் செவ்வாய் நாட்களில், அவர்கள் தற்போது பயிற்சி பெறும் இடத்திலேயே, தினம் 2 மணி நேரம் என்றோ அல்லது ஒரே நாளில் 6 மணி நேரம் தொடர்ந்தோ அல்லது காலை 3 மணி நேரம் மற்றும் மாலை 3 மணி நேரம் என்று இடைவெளி விட்டோ எடுத்துக்கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் இன்றைக்கு தெரிவித்த கருத்துக்காக ஒரு செய்தியைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த வரவு-செலவுத் திட்டக் கூட்டத்தொடரில் காங்கிரஸ் இயக்கத்தைச் சார்ந்தவர்கள் 25 பேர் பேசியிருக்கிறார்கள். அவர்கள் பேசிய நேரம் 8 மணி 11 நிமிடம். திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் 1-4-2003-லேயிருந்து ஒரு மணி 18 மணித்துளிகள் பேசியிருக்கிறார்கள். ஆகவே வாய்ப்புகள் மறுக்கப்பட்டன என்று சொல்வது உண்மைக்கு மாறுபட்டது என்பதைக் கொஞ்சம் வேதனையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

5. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) விதி 32-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 10-5-2003 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் ஒத்திவைப்பு குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர்.